# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி
மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, மேற்கு,
தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்
சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்),
பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் நீலகிரி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : **13763/ 2008 /** எம்சி. **8** நாள் : **17 .10.2008**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற **23.10.2008** வியாழக்கிழமை காலை **10.00** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## அக்டோபர் 2008 - மாமன்ற சாதாரண கூட்டம் - நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | தெற்கு மண்டலம் -உக்கடம் பேருந்து நிலையம் - தொலைபேசி பெட்டிக்கடை பெயர் மாற்றம் கோருதல் -மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 2 | தெற்கு மண்டலம் -வார்டு எண் 43- ஒக்கிலியர் காலனி – குழந்தைகள் மற்றும் முதியோர் காப்பகம் அமைத்தல்- சமுதாய வளர்ச்சி நிதி மூலம் மேற்கொள்ளுதல் - மாமன்றம் ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 3 | நகரமைப்புப் பிரிவு - வடக்கு மண்டலம் -100 அடி ரோட்டில் இருந்து அவினாசி சாலை வரை சாலை அமைத்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 4 | தெற்கு மண்டலம் -வ.உ.சி. பூங்கா சிற்றுண்டி சாலை –பெயர் மாற்றம் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 5 | நகரமைப்புப் பிரிவு - கிழக்கு மண்டலம் -க.ச.எண் 391/E- 27 சென்ட் நிலம் - திட்டசாலை நீக்கம் செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 6 | நகரமைப்புப் பிரிவு - வடக்கு மண்டலம் -வார்டு எண் 72 – க.ச.எண். 464 பாகம் உள்ளிட்டவை- 18.96 ஏக்கர் நிலம் –நில உபயோக மாற்றம் செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 7 | நகரமைப்புப் பிரிவு - வடக்கு மண்டலம் -க.ச.எண் 334/2,3,4 உள்ளிட்டவை – 6.43 ஏக்கர் நிலம் - நில உபயோக மாற்றம் செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 8 | கிழக்கு மண்டலம் -சொத்து வரி உயர்வு - மேல் முறையீடு – தீர்ப்பு அடிப்படையில் வரி குறைப்பு செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 9 | பணியமைப்பு -திரு கோ. சரவணக்குமார், இளநிலை பொறியாளர் -பதவி உயர்வு - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 10 | வடக்கு மண்டலம் -வார்டு எண் 70 மற்றும் 72 –சக்தி சாலையில் கட்டப்படும் மேம்பாலம் - சாய்வு மாற்றியமைத்தல் -மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 11 | கிழக்கு மண்டலம் -வரிவிதிப்பு எண் 15231 – சொத்து வரி மேல்முறையீடு – தீர்ப்பு அடிப்படையில் வரி குறைப்பு செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 12 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் -குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| 13 | நகரமைப்புப் பிரிவு - கிழக்கு மண்டலம் -க.ச.எண் 413/2 –பல அடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 14 | பொறியியல் பிரிவு - 17 அபிவிருத்திப் பணிகள் செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |
| 15 | பணியமைப்பு - தெற்கு மண்டலம் - உக்கடம் மற்றும் காந்திபுரம் பேருந்து நிலையங்களில் டெக்ஸ்கோ நிறுவனம் மூலம் காவலாளிகள் நியமனம் செய்தல் -தொகை வழங்குதல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 16 | தெற்கு மண்டலம் -முத்து விநாயகர் கோயில் வீதி வணிக வளாக கடைகள் -ஒதுக்கீடு செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 17 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் -வார்டு எண் 7-சுகாதாரப் பணியாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் பிளாக் A மற்றும் B கட்டுதல் - ரூ. 1 கோடி மதிப்பீடு – நிர்வாக அனுமதி வேண்டுதல் -தொடர்பாக |
| 18 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் -வார்டு எண் 7-சுகாதாரப் பணியாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் பிளாக் C மற்றும் D கட்டுதல் - ரூ. 1 கோடி மதிப்பீடு – நிர்வாக அனுமதி வேண்டுதல் -தொடர்பாக |

| | |
|---|---|
| **19** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் -வார்டு எண் 2-பயனீர் மில் சாலை -சுகாதாரப் பணியாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் பிளாக் A மற்றும் B கட்டுதல் - ரூ. 1 கோடி மதிப்பீடு – நிர்வாக அனுமதி வேண்டுதல் -தொடர்பாக |
| **20** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் -வார்டு எண் 2-பயனீர் மில் சாலை -சுகாதாரப் பணியாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் பிளாக் C மற்றும் D கட்டுதல் - ரூ. 1 கோடி மதிப்பீடு – நிர்வாக அனுமதி வேண்டுதல் -தொடர்பாக |
| **21** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் -வார்டு எண் 2-பயனீர் மில் சாலை -சுகாதாரப் பணியாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் பிளாக் E மற்றும் F கட்டுதல் - ரூ. 1 கோடி மதிப்பீடு – நிர்வாக அனுமதி வேண்டுதல் -தொடர்பாக |
| **22** | Jnnurm –உக்கடம் கழிவு நீர் பண்ணை –தைல மரங்கள் வெட்டுதல் -ஒப்பந்தப் புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **23** | நகரமைப்புப் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 36 – சிரியன் சர்ச் சாலை 2- 8680 சதுரடி மனையிடம் - வணிக உபயோகமாக மாற்றுதல் மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **24** | நகரமைப்புப் பிரிவு - கிழக்கு மண்டலம் -இராமநாதபுரம் கிராமம் - 4775.25 ச.மீ. பரப்பு மனையிடம் - வணிக உபயோகமாக மாற்றம் செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |

நன்றியுரை

## திருக்குறள்

**வெள்ளத் தனைய மலா்நீட்டம் மாந்தா்தம்**
**உள்ளத் தனைய துயா்வு.**

(குறள் -595)

## விளக்கம்

**தண்ணீரின் அளவுதான் அதில் மலா்ந்துள்ள தாமரைத் தண்டின் அளவும் இருக்கும். அதுபோல மனிதரின் வாழ்க்கையின் உயா்வு அவா் மனத்தில் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவே இருக்கும்.**

திருவள்ளுவா்.

---

## ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமாா்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவா்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நோ்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவா்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணா்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணா்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

---

## பொருள் எண் 1

**29.9.2008 ம் தேதிய மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் மன்றத்தின் ஒப்புதலுக்கு மீண்டும் சமா்ப்பிக்கப்படுகிறது.**

**பொருள் - கடைகள்-கோயமுத்தூா் மாநகராட்சி – தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட உக்கடம் பேருந்து நிலையம் - தொலைபேசி பெட்டி பெயா் மாற்றம் - தொடா்பாக**

**-----------------**

**கோயமுத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் பேருந்து நிலையத்தில் தொலைபேசி பெட்டி வைத்துள்ள திரு எ. கோபால் என்பவா் காலமாகி விட்டதால், இவருடன் கூட்டாக வியாபாரம் செய்தவரும், தற்பொழுது மேற்படி கடையினை நடத்துபவருமான திரு டி. விஸ்வேஸ்வரன் என்பவா், மேற்படி கடையின் பெயரினை தனது பெயருக்கு மாற்றம் செய்து தருமாறு கோரியுள்ளாா்.**

**தற்போதைய அரசாணை எண். 92 நாள் 03-07-2007 "அனுமதியற்ற அனுபோகதாரா்களின் நோ்வில் ஒருமுறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமையை அவா்களுடைய பெயரில் மாற்றித் தரலாம். இதற்காக விண்ணப்பதாரா்கள் 12 மாதங்களுக்குரிய மாதாந்திர குத்தகை தொகைக்கு சமமான தொகையை முன்பணமாக செலுத்தவேண்டும். இது தவிர கீழே குறிப்பிட்டுள்ள குறைந்த அளவு தொகைக்குட்பட்டு 12 மாத வாடகைக்கு சமமான தொகையை பெயா் மாற்றக் கட்டணமாகவும் அவா் செலுத்தவேண்டும்" என குறிப்பிடப்பட்டுள்ளது.**

**மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ளபடி வாடகை முன்பணம் மற்றும் பெயா் மாற்றக் கட்டணம் ஆகியவற்றை செலுத்தியுள்ளாா்.**

**1. மாத வாடகை - ரசீது எண். 0858 நாள். 24-01-2008 - ரூ. 7944.00**

**2. பெயா் மாற்றக் கட்டணம் - ரசீது எண். 0870 நாள். 24-01-2008 - ரூ. 2500.00**

**எனவே உக்கடம் பேருந்து நிலைய தொலைபேசி பெட்டி திரு டி. விஸ்வேஸ்வரன் என்பவருக்கு பெயா் மாற்றம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி பெற்று மாமன்றத்திற்குப் பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம்.** **ந.க.எண். 509/2008/அ10**

**<u>மா.ந.ம.தீா்மானம் எண் : 254 நாள் : 30.10.2008</u>**

**அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்**
**மேயா்**
**கோயம்புத்தூா் மாநகராட்சி**

---

## பொருள் எண் 2

**கோயம்புத்தூா் மாநகராட்சி, தெற்கு மண்டலம், வாா்டு எண். 43-க்குட்பட்ட ஒக்கிலியா் காலனி, மேல்நிலைப்பள்ளியின் பின்புறம் கடைகளுக்காக ஷெட்கள் கட்டப்பட்டு நீண்டகாலமாக எந்த வித பயன்பாடுமின்றி உள்ளது.**

**மேற்படி காலியாக உள்ள நான்கு ஷெட்களை குழந்தைகள் காப்பகம் மற்றும் முதியோா் காப்பகம் அமைத்திடவும், காப்பகத்தின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை Community Development fund (CDF) மூலம் செய்திடவும் மற்றும் பராமரிப்பு நிா்வாகத்தை பொதுநல சேவையை முன்னிட்டு 43 –வது வாா்டு கூட்டமைப்பிடம் மாநகராட்சி குறைந்தபட்ச வாடகை அடிப்படையில் ஒப்படைக்குமாறு, 43-வது வாா்டு மாமன்ற உறுப்பினா் தனது 18.9.08 ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளாா்.**

**இப்பொருள் குறித்து முடிவு செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.**

அலுவலகக் குறிப்பு - கடைகளுக்காக கட்டப்பட்டு நீண்டகாலமாக பயன்படாமல் உள்ள ஷெட்களை குழந்தைகள் காப்பகம் மற்றும் முதியோா் காப்பகம் அமைத்திடவும் காப்பகத்தின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை **Community Development fund (CDF)** மூலம் செய்திடவும் மற்றும் பராமரிப்பு நிா்வாகத்தை பொதுநல சேவையை முன்னிட்டு 43- வது கூட்டமைப்பிடம் மாநகராட்சி குறைந்தபட்ச வாடகை அடிப்படையில் வழங்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 13038/08/JN5

மா.ந.ம.தீா்மானம் எண் : 255 நாள் : 30.10.2008

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு குழந்தைகள் காப்பகம் மற்றும் முதியோா் காப்பகம் சமுதாய பங்கேற்பு நிதியில் ( **Community Participation fund**) அமைக்க தீா்மானிக்கப்பட்டது. இக்காப்பகங்களை பராமரிக்கும் பொறுப்பை ஆறு மாதம் அல்லது 1 வருடத்திற்கு பரிச்சாா்ந்த முறையில் பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள 43-வது வாா்டு கூட்டமைப்பிடம் ஒப்படை செய்யவும் தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

பொருள் எண் 3

100’-0” சாலையில் இருந்து எஸ்.என்.ஆா் கல்லூாி ஆவாரம்பாளையம் ரோடு வழியாக அவினாசி சாலையை இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 100’-0” சாலையில் இருந்து பி. என் பாளையம் மின்மயானம் வழியாக சங்கனூா் பள்ளம் வரை 100’-0”, 75’-0”, 60’-0” அகலத்தில் சாலை உள்ளது. சங்கனூா் பள்ளத்தில் இருந்து எஸ்.என்.ஆா் கல்லூாி வழியாக பாலம் அமைக்கப்பட வேண்டும். சங்கனூா் பள்ளத்தில் இருந்து ஆவராம்பாளையம் சாலை வரை எஸ்.என்.ஆா் கல்லூாி வழியாக 575’-0” நீளம் 60’-0” அகலத்தில் புதிதாக சாலை அமைக்கப்படவேண்டும். ஆவராம்பாளையம் சாலையில் இருந்து அவனாசி சாலை வரை ஏற்கனவே 60’-0” மற்றும் 40’-0” அகல சாலை உள்ளது. இதனை 60’-0” அகலமாக விஸ்தாிப்பு செய்யப்பட வேண்டும். சாலை விஸ்தாிப்பு செய்ய வேண்டிய நில உாிமையாளா்களின் விபரங்கள் கீழ்க்கண்ட பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பெயா் | க.ச.எண் / கிராமம் | பரப்பளவு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | எஸ்.என்.ஆா் சன்ஸ் சாாிட்டாி டிரஸ்ட் | 391 பா, 390 / 2 பா, 392 பா மற்றும் 399பா சௌாிபாளையம் கிராமம் | 34,175 ச.அடி மற்றும் 6949 ச.அடி |
| 2 | ஆா். ரங்கநாதன், த/பெ.ஜி ராஜகோபால் நாயுடு | 398 / 2 பா, சௌாிபாளையம் கிராமம் | 2645 ச.அடி |
| 3 | (லேட்) ஜி. இந்திராணி, மகள் - ஜி. சத்தியா | 341 / 5பி பா, 341/ 4ஏ1பா, 338/ 1பா கிருஷ்ணராயபுரம் கிராமம் | 2242 ச.அடி |
| 4 | டாக்டா். கணேசன் | 334 / 2 கிருஷ்ணராயபுரம் கிராமம் | 646 ச.அடி |
| 5 | சௌத் இந்தியன் மோட்டாா், மூா்த்தி | 334 / 1பா கிருஷ்ணராயபுரம் கிராமம் | 162 ச.அடி |
| 6 | கலைவாணி மற்றும் பலா் | 334 / 1பா கிருஷ்ணராயபுரம் கிராமம் | 556 ச.அடி |

| | | | |
|---|---|---|---|
| 7 | பாலசுப்பிரமணியம் | 334 / 1பா<br>கிருஷ்ணராயபுரம் கிராமம் | 628 ச.அடி |
| 8 | கே. ராமசாமி | 334 / 1பா<br>கிருஷ்ணராயபுரம் கிராமம் | 366 ச.அடி |
| 9 | பி. விநாயக மூர்த்தி<br>சௌத் இந்தியன்<br>மோட்டார்ஸ் | 334 / 1பா<br>கிருஷ்ணராயபுரம் கிராமம் | 14 ச.அடி |
| 10 | வி. ஆண்டாள்,<br>க/பெ.ஏ.கே. ஜெகநாதன் | 334 / 1பா<br>கிருஷ்ணராயபுரம் கிராமம் | 117 ச.அடி |
| 11 | ரவி, ஆர்.வி. ஹோட்டல்ஸ் | 395 / 1பா,<br>சௌரிபாளையம் கிராமம் | 1680 ச.அடி |
| 12 | ஆர். சிவதாசன் | 395 / 1பா,<br>சௌரிபாளையம் கிராமம் | 922 ச.அடி |
| 13 | ஆர். பாலசுப்பிரமணியம்<br>சௌந்தர்ராஜ்<br>த / பெ.ராமசாமி நாயுடு | 395 / 1ஏ பா, மற்றும் 393 பா<br>சௌரிபாளையம் கிராமம் | 1726 ச.அடி |
| | | மொத்த பரப்பு | 52828 ச.அடி |

மேற்படி விபரங்களை நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் முடிவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண். 61 நாள் 22.09.2008 ல் " விரிவு அபிவிருத்தித் திட்டத்தின் படி சாலை அமைக்க உத்தேசித்துள்ள பகுதியில் நெருக்கமாக குடியிருப்பு வீடுகள் உள்ளதால் அதன் வழியே சாலை அமைக்க வழிவகையில்லை. எனவே மேற்படி உத்தேச திட்ட சாலையின் போக்கை எஸ்.என்.ஆர் கல்லூரி வழியே ஆவாரம்பாளையம் சாலையை இணைக்கவும், 60’ அகலத்திற்கு ஆவாரம்பாளையம் சாலையை இட உரிமையாளர்களிடமிருந்து தேவைப்படும் இடங்களை தானமாகப் பெற்று சாலையமைக்கத் தீர்மானிக்கப்பட்டது " என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-மாமன்றத்தின் ஒப்புதலுக்கு ந.க.எண். 12756 / 08 / எச்2 (வ)

**மா.ந.ம.தீர்மானம் எண் : 256 நாள் : 30.10.2008**

**நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் 22.9.08 ம் தேதிய தீர்மானம் எண் 61 ஐ ஏற்று பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தேச திட்ட சாலையினை எஸ்.என்.ஆர். கல்லூரி வழியாக ஆவராம்பாளையம் சாலையுடன் இணைக்க தீர்மானிக்கப்பட்டது. இச்சாலை அமைக்க தேவைப்படும் நிலங்களை நில உரிமையாளர்களிடமிருந்து தானமாகப் பெற்று சாலை அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 4**

**பொருள் : கடைகள் – கோயமுத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலம் - வ.உ.சி பூங்கா சிற்றுண்டிச்சாலை பெயா் மாற்றம் கோருதல் – தொடா்பாக.**

----------------

**கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வ.உ.சி பூங்கா சிற்றுண்டிச் சாலையின் உரிமதாரா் திருமதி T. ராஜலட்சுமி என்பவா் நடத்தி வந்தாா். இந்நிலையில் கடந்த 07.12.2002-ல் திருமதி T. ராஜலட்சுமி இறந்து விட்டதால், அவருடைய வாரிசுதாரரான திருமதி T. லட்சுமி பிரியா என்பவா் நடத்தி வந்தாா். ஏற்கனவே உள்ள உயா் நீதிமன்ற வழக்கினை வாபஸ் பெற்றுக்கொள்வதாக உறுதிமொழி பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளாா்.**

**மேலும் இவா்கள் மாநகராட்சி அவ்வப்பொழுது நிா்ணயித்த வாடகையினை முறையாக அதாவது 1992-95 வரை ரூ.2,556/-, 1995-98 வரை ரூ.3,323/- , 1998-2001 வரை ரூ.4,319/- , 2001-2004 வரை ரூ.5,616/- மற்றும் 2004-2007 வரை ரூ.6,459/- என முறையே செலுத்தி வந்துள்ளனா்.**

**இந்நிலையில், மேற்படியாா் தனது குடும்ப சூழல் காரணமாக சிற்றுண்டிச்சாலையை நடத்த முடியவில்லை என்பதால் தற்பொழுது திரு. சு. அனந்தகிருஷ்ணன் என்பவா் தனது பெயருக்கு மாற்றித் தர விண்ணப்பம் நாள் 21.07.2008 அளித்துள்ளாா். இதற்காக இவா்கள் இருவரும் செய்து கொண்ட விற்பனை ஒப்பந்தப் பத்திர நகலையும் இணைத்துள்ளாா்.**

**எனவே, அரசாணை எண். 92 நாள் 03.07.2007ன் நிபந்தனை எண்.4 (V)ன் படி “அனுமதியற்ற அனுபோகதாரா்களின் நோ்வில், ஒருமுறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில்” குத்தகை உரிமையை மாநகராட்சி விதிக்கும் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடக்கும் பட்சத்தில் திரு சு. அனந்தகிருஷ்ணன் என்பவருக்கு வ.உ.சி பூங்கா சிற்றுண்டிச் சாலையை பெயா் மாற்றம் செய்து தர மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.**

1. **ஓா் ஆண்டிற்கான வாடகையை முன்பணமாக செலுத்தவேண்டும்.**
2. **பெயா் மாற்றம் கட்டணமாக ரூ.2500/- செலுத்தவேண்டும்.**
3. **ஏற்கனவே உள்ள வாடகையில் இருந்து 15% 2007-2010 வரை உயா்வு செய்து வசூல் செய்து கொள்ளலாம்.**
4. **உரிமம் புதுப்பிக்கப்படும் 3 ஆண்டுகளுக்கு புதிய ஒப்பந்தப்பத்திரம் எழுதி தரவேண்டும்.**

**அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம்.** **ந.க.எண். 9769/ 07 அ10**

**மா.ந.ம.தீா்மானம் எண் : 257 நாள் : 30.10.2008**

**அலுவலகக் குறிப்பு ரத்து செய்ய தீா்மானிக்கப்பட்டது. நிலுவையில் உள்ள உயா்நீதிமன்ற வழக்கினை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கவும், உயா்நீதிமன்ற தீா்ப்பின் அடிப்படையில் மேல் நடவடிக்கை தொடரவும் தீா்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்**
**மேயா்**
**கோயம்புத்தூா் மாநகராட்சி**

---

## பொருள் எண் 5

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், சிங்காநல்லூர் கிராமம் க.ச. எண். 391 /E 27 சென்ட் நிலம் உள்ளது என்றும், அதில் C2 – C2 40'0" திட்டசாலை செல்வதாகவும் அதனை நீக்கம் செய்து கொடுக்குமாறு மனுதாரர் திரு. ஜி. தாமோதரன் என்பவர் 25.6.2008 –ம் தேதிய விண்ணப்பத்தில் கோரியுள்ளார்.

மேற்படி இடம் மாநகராட்சி வார்டு 7 சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 37- ல் C2 – C2 40'0" அகல திட்ட சாலை மனுதாரரின் இடத்தினூடே அமையுமாறு திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் இடத்தின் கிழக்கே திட்டப்படி சாலை அமைந்துவிட்டது. ஆனால் மனுதாரர் இடத்தின் மேற்கே திட்டப்படி சாலை அமையாமல் 30 அடி தூரத்தில் வடபுறமும், 80 அடி தூரத்தில் தென்புறமும் கிழ மேலாக இரு சாலைகள் அபிவிருத்தியடைந்துள்ளது. மனுதாரர் இதனை குறிப்பிட்டு தமது இடத்தினூடே அமைய உத்தேசித்துள்ள திட்ட சாலை தேவையில்லை என்றும், மேற்படி திட்ட சாலை பகுதியை நீக்கம் செய்து தருமாறு கோரியுள்ளார்.

எனவே, மனுதாரரின் கோரிக்கையினை உள்ளூர் திட்ட குழுமம் மூலம் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று அனுப்ப நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழுவின் முடிவுக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண். 63 நாள். 22.09.2008 –ல் " மனுதாரரின் இடத்தின் வடபுறமும், தென்புறமும் ஏற்கனவே பொருளில் குறிப்பிட்டவாறு சாலை அமைக்கப்பட்டுள்ளதால், மனுதாரர் இடத்தினூடே அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள உத்தேச திட்ட சாலை பகுதியை நீக்கம் செய்ய கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு மாமன்றத்திற்கு பரிந்துரைக்க தீர்மானிக்கப்பட்டது".
நிபந்தனை: வடகிழக்கில் உள்ள மூலை முடுக்கு கூடுதல் இடத்தை மாநகராட்சிக்கு மனுதாரர் தானமாக வழங்கவேண்டும். என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -மாமன்றத்தின் ஒப்புதலுக்கு ந.க.எண். 10164 / 2008 / எச் 1கி.

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 258 நாள் : 30.10.2008</u>

நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் 22.9.08 ம் தேதிய தீர்மான எண் 63 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 6

கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண்-72ல் க.ச.எண் 464 பாகம், 465, 466, 467, 468 பாகம் மற்றும் 469/1 பாகம் கணபதி கிராமம் இடத்தில் 18.96 ஏக்கர் கொண்ட ராமகிருஷ்ணா மில் வளாகம் உள்ளது. மனுதாரரின் மனையிடம் தொழிற்சாலை பயன்பாட்டு பகுதியில் அமைந்துள்ளது. இதனை கலப்பு குடியிருப்பு நில உபயோகமாக மாற்றம் செய்ய கேட்டுள்ளார்.

மனையிடம் சத்தியமங்கலம் சாலையை அணுகு சாலையாக கொண்டு அமைந்துள்ளது. மனையிடம் கணபதி விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்-3லும், முழுமைத் திட்டத்தின் படி தொழிற்சாலைப் பயன்பாட்டில் அமைகிறது. மனையிடத்தின் தென்புறம் உள்ள சாலை 80'-0" ஆக அகலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இடத்தில் 40'-0" அகலம் உள்ளது. இருபுறமும் 20'-0" அகலப்படுத்தப்பட வேண்டும். எனவே, மனுதாரரின் மனையிடத்தின் தென்புறம் 20'-0" அகலம் சாலைக்காக விஸ்தரிப்பு செய்யப்படவேண்டும். இதனை மனுதாரரிடம் இருந்து மாநகராட்சிக்கு தானமாக பெறலாம்.

மனுதாரரின் க.ச.எண்-464 பாகம், 465, 466, 467, 468பாகம் மற்றும் 469/1 பாகம் கணபதி கிராமம் 18.96 ஏக்கர் பரப்புள்ள இடத்தை தொழிற்சாலை பயன்பாட்டில் இருந்து கலப்பு குடியிருப்பு பயன்பாட்டிற்கு மாற்றம் செய்வது குறித்து தீர்மானிக்க, நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண். 65 நாள் 22.09.2008 ல் "அவினாசி சாலையை சத்தி சாலை வழியாக, மேட்டுப்பாளையம் சாலையை இணைக்கும் 9 கி.மீ நீளத்தில் 80' சராசரி அகலத்தில் அமைக்கும் திட்டம் மாமன்ற ஒப்புதலுடன் அரசுக்கு அனுப்பி ஆய்வில் உள்ளதாலும், மேற்படி சாலைக்கு

இப்பொருள் பற்றிய நிலத்தின் வழியே செல்ல உத்தேசித்திருப்பதாலும் மேற்படி சாலை விஸ்தரிப்புக்குரிய நிலத்தை மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைக்க வேண்டும் என்கிற நிபந்தனையுடன் பொருளை மாமன்றத்திற்கு பரிந்துரைக்க தீர்மானிக்கப்பட்டது'' என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -மாமன்றத்தின் ஒப்புதலுக்கு ந.க.எண். 7060 / 08 / எச்2 (வ)

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 259 நாள் : 30.10.2008</u>

பொருள் ஒத்தி வைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 7

திரு. பி. ஆனந்த் நகாட்டா (பவர் ஏஜெண்ட்) மனுதாரரின் மனையிடம் க.ச.எண். 334/2,3,4, 335/2, 3a, 3a2, 3b, மற்றும் 336/1, 2, 3, 4, 5, 6-ல் கிருஷ்ணராயபுரம் கிராமம், அவினாசி ரோடு, ஆவாரம்பாளையம் ரோடு சந்திப்பில் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ளது. மனுதாரரின் மனையிடத்தின் பரப்பு 6.43 ஏக்கர் மனுதாரர் மனையிடத்தை பலஅடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்ய கேட்டுள்ளார்.

மனையிடம் கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண் 17-லிலும், சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 19-லும் முழுமைத்திட்டத்தின்படி தொழிற்சாலை பகுதியிலும் அமைந்துள்ளது. மனையிடத்தின் முன்புறம் 100'.0'' அடி அகலம் உள்ள அவினாசி சாலை அணுகு சாலையாக அமைந்துள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிடத்தின் உயரம் 64.50 மீட்டர். மனுதாரரின் மனையிடத்தை பல அடுக்குமாடி உயர் கட்டிட சிறப்பு அனுமதி வழங்குமாறு கேட்டுள்ளார்.

மனுதாரரின் மனையிடத்தில் பலஅடுக்குமாடிக் கட்டிடம் கட்ட மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் (NOC), விமான நிலையத்துறை (NOC), தீயணைப்பு மற்றும் மீட்டுத்துறை (NOC), பெறப்படவேண்டும்.

மனுதாரரின் மனையிடத்தில் 65 மீட்டர் உயர பல அடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்க மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு. அனுமதி வழங்கலாம். ந.க. எண். 5543 / 08 / எச்2.

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 260 நாள் : 30.10.2008</u>

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள 6.43 ஏக்கர் மனையிடத்திற்கு காலியிட வரி நிர்ணயம் செய்து வசூலிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன்,பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள 6.43 ஏக்கர் மனையிடத்தை 65 மீட்டர் உயர பல அடுக்குமாடி உயர் கட்டிட சிறப்பு கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 8

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலப் பகுதிக்குட்பட்ட சொத்துவரி உரிமைதாரர்கள் தங்களது சொத்திற்கு விதிக்கப்பட்ட காலியிட வரி மற்றும் சொத்துவரி அதிகம் என ஆட்சேபணை செய்து மேல்முறையீடு செய்துள்ளார்கள்.

அதன்பேரில் கோவை மாநகராட்சி மேல்முறையீடு தீர்ப்பாயம் கீழே கொடுக்கப்பட்டுள்ள விபரப்படி வரி மற்றும் சொத்து வரியினை குறைத்து உத்திரவு வழங்கியுள்ளது.

சொத்துவரி மேல் முறையீடுதாரர்களின் விபரம் மற்றும் மேல் முறையீடு தீர்ப்பாயத்தில் வரி குறைக்கப்பட்ட விபரம் பட்டியல் தனியாக பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பட்டியலில் கண்டுள்ள மனுதாரர்கள் மேல்முறையீடு தீர்ப்பாய உத்திரவின் அடிப்படையில் வரிக்குறைப்பு செய்து கொடுக்குமாறு விண்ணப்பித்துள்ளார்கள்.

<u>பட்டியல்</u>

1. வரிசை எண்.1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு 25% குறைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

2. வரிசை எண்.3 மற்றும் 4 ஆகிய இனங்களுக்கு 10% குறைத்து கொடுக்கப்பட்டுள்ளது ஏற்றுக்கொள்ளலாம்.

3. வரிசை எண்.5-க்கு 7% குறைத்து கொடுக்கப்பட்டுள்ளது. ஏற்றுக்கொள்ளலாம்.

மேற்காண் பட்டியலில் கண்டுள்ள மனுதாரர்களின் சொத்துவரி குறைப்பு குறித்து விபரங்களை தெரிவித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண். 53 நாள் 25.8.2008-ன் மூலம் அனுமதி வழங்கியுள்ளதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

### கோவை மாநகராட்சி - கிழக்கு மண்டலம்

| வ. எண் | வார்டு எண். | டி.ஏ.டி.எண் மற்றும் கோப்பு எண். | பெயர் மற்றும் விலாசம் | வரிவிதிப்பு எண். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | 22 | 146/2004/கி<br>8849/2007/கிஅ6 | திருமதி.அன்னம்மாள்,<br>116, பெரியார் நகர்,<br>புலியகுளம்,<br>கோவை. | 79062 |
| | | 146/2004/கி<br>8849/2007/கிஅ6 | திருமதி.அன்னம்மாள்,<br>116, பெரியார் நகர்,<br>புலியகுளம்,கோவை. | 79062 |
| 2. | 22 | 366/1998/கி<br>367/1998/கி<br>5394/2008/கிஅ6 | திரு.ஆர். வரதராஜன்,<br>செல்லத்தம்மாள்,<br>1784, 1788,<br>திருச்சிரோடு.<br>கோவை | 80472<br>80473 |
| 3. | 22 | 145/2004/கி<br>8850/2007/கிஅ6 | திருமதி.அன்னம்மாள்,<br>116, பெரியார் நகர்,<br>புலியகுளம்,<br>கோவை. | 78048 |
| 4. | 22 | 3/2007/கி<br>6346/2007/கிஅ6 | திரு.ஆர்.பி.காவேரிபாபு,<br>பு.எண்.87,ப.எண்.193,<br>போலீஸ் கந்தசாமி வீதி,<br>கணேசபுரம்,<br>கோவை. | 80818 |
| 5. | 22 | 204/2007/கி<br>5819/2007/கிஅ6 | திருமதி. ஆர். சங்கரி,<br>405,பங்கஜாமில் ரோடு,<br>ராமசாமி நகர்,<br>இராமநாதபுரம். | 79843 |

| ஏற்கனவே உள்ள அரையாண்டு வரி ரூ. | குறைக்கப் பட்டபின் வரி ரூ. | With effect from | குறைக்கப் பட்ட வரிவிகிதம் | தீர்ப்பாயத்தில் வரி குறைக்கப்பட்ட காரணம் |
|---|---|---|---|---|
| (6) | (7) | (8) | (9) | (10) |
| 5161<br><br>3871 | 3871<br><br>4645 | 1.4.93<br><br>1.10.98 | 25%<br><br>20% | அடிப்படை வசதிகளற்ற பகுதி என்பதாலும், இரயில் நிலையம், பேருந்து நிலையம், மருத்துவமனை மேல்முறையீட்டு சொத்திற்கு வெகு தொலைவில் உள்ளதாகவும் அமைவிடத்தைக் கருத்தில் கொண்டு 25% குறைக்கப்பட்டது. மேலும் 20% உயர்வு செய்து தீர்ப்பாயம் தீர்ப்பளித்துள்ளது. |
| 27414<br>33965 | 20560 | 1.4.93<br>முதல்<br>30.9.98 | 25% | மாதாந்திர வாடகையை கணக்கீடு செய்யப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. |
| 4301 | 3871 | 1.4.93 | 10% | மேல்முறையீட்டுச் சொத்தின் அமைவிடமான பெரியார் நகர் அடிப்படை வசதிகளற்ற பகுதி என்பதாகக் குறிப்பிட்டு 10% குறைக்கப்பட்டுள்ளது. |
| 1016 | 914 | 1.4.06 | 10% | சொத்தானது அதிக வரிவிதிப்பை செலுத்த முடியவில்லை என்பதால், சொத்து அமைந்துள்ள பகுதியில் அடிப்படை வசதிகள் இல்லை என்பதை பரிசீலனை செய்து சற்று வரியை குறைப்பது என்று தீர்ப்பாயம் முடிவு செய்யப்பட்டுள்ளது. |
| 3043 | 2835 | 1.4.98 | 7% | மேல்முறையீட்டு கட்டிடத்தின் சரியான அளவை மறு அளவீடு செய்து சரியான பரப்பளவான 1896 கதுரடி கணக்கிட்டு, சரியான வரிவிதிப்பு செய்து தீர்ப்பாயம் முடிவு செய்யப்பட்டுள்ளது. |

ந.க.எண். 8849/08/EA 6

**<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 261 நாள் : 30.10.2008</u>**

**வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் 25.8.08 ம் தேதிய தீர்மானம் எண் 53 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் : 9

பொருள் : பணியமைப்பு – கோயம்புத்தூா் மாநகராட்சி – தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணி விதிகள், 1996 – வகுப்பு II, பிரிவு I, இனம் (1) – உதவி செயற்பொறியாளர் (பிரதான அலுவலகம்) பணியிடம் – மாநகராட்சியிலுள்ள அனைத்து வாகனங்கள் பராமரித்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளை கவனிக்க உருவாக்கப்பட்டது – மேற்கண்ட பணியிடத்தை திரு.கோ.சரவணக்குமார், இளநிலைப்பொறியாளருக்கு (இயந்திரப்பொறியியல்) பதவி உயர்வு அளித்து நிரப்புதல் – மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண் 237 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை நாள் 26-09-1996.
2. அரசாணை (நிலை) எண் 139 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை நாள் 27-05-1997.
3. அரசாணை (நிலை) எண் 140 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 27-05-1997.
4. அரசாணை (நிலை) எண் 77 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந - 4) துறை நாள் 13-05-1998.
5. ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களது குறிப்பாணை ந.க.எண் 177769 / 2006 / எம்.சி 1 நாள் 22-12-2006.
6. ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களது செயல்முறைகள் ந.க.எண் 177769 / 2006 / எம்.சி 1 நாள் 14-08-2007.
7. திரு.கோ.சரவணக்குமார்,இளநிலைப்பொறியாளர் (இயந்திரப்பொறியியல்) நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு 12-05-2008 தேதியில் கொடுக்கப்பட்ட மனு.
8. நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்: 4298/2008/F4 நாள் 29-05-2008.
9. சென்னை உயர்நீதி மன்றத்திற்கான மாநகராட்சி வழக்கறிஞர் திரு.ஆர்.சிவக்குமார் அவர்களது கடிதம் நாள் 22-09-2008.
10. வழக்கு எண்கள் டபில்யு.பி.எண்:14082/2008 மற்றும் டபில்யு.பி.எண்:14083/2008 ஆகியவற்றின மீது சென்னை உயர்நீதி மன்றம் பிறப்பித்த இறுதி தீர்ப்பு நாள் 22-09-2008.

கடந்த 17-06-2008-ம் தேதிய மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் வைக்கப்பட்ட பொருள் எண்:23-ன் விவாதத்திற்கு எடுக்கப்பட்டது. இம்மாநகராட்சியில் பணிபுரியும் திரு.பா.பிராபகரன், இளநிலைப்பொறியாளர் மற்றும் திருமதி. ஆர். பத்மா, உதவிப்பொறியாளர் ஆகியோர் மேற்படி பொருளினை மன்றத்தில் வைக்கப்பட்டதனை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் முறையே டபில்யு.பி.எண்:14082/2008 மற்றும் டபில்யு.பி.எண்:14083/2008 ஆகியவற்றின் மூலம் இரண்டு வழக்குகளை தொடர்ந்து கடந்த 16-06-2008 அன்று தடையுத்திரவு பெற்றனர். சென்னை உயர்நீதி மன்றம் தடையுத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தொலையச்சு மூலம் தகவல் பெறப்பட்டதனை தொடர்ந்து இம்மாமன்றம் தனது தீர்மான எண்: 124 நாள் 17-06-2008-ல் மேற்படி பொருள் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றத்திற்கான மாநகராட்சி வழக்கறிஞரின் சட்ட ஆலோசனை பெற்று மேல் நடவடிக்கை தொடரலாமென தீர்மானித்து முடிவு செய்தது. சென்னை உயர்நீதி மன்றத்திற்கான மாநகராட்சி வழக்கறிஞர் திரு. ஆர். சிவக்குமார் அவர்கள் தனது 22-09-2008-ம் தேதிய கடிதத்தில் மேற்கூறிய இரண்டு வழக்குகள் 22-09-2008 அன்று விசாரணை மற்றும் இறுதி உத்திரவிற்கு வந்ததாகவும் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மேற்கூறிய இரண்டு வழக்குகளையும் தள்ளுபடி செய்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்படி பொருளினை மீண்டும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கலாமென சட்டக்கருத்து வழங்கியுள்ளார். மேலும் வழக்கு எண்கள்:14082/2008 மற்றும் 14083/2008-ன் தொடர்பான சென்னை உயர்நீதி மன்றம் பிறப்பித்த இறுதி தீர்ப்பின் அசல் நகலினை 26-09-2008 அன்று அனுப்பியுள்ளார். எனவே கடந்த 17-06-2008-ம் தேதிய மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் வைக்கப்பட்ட பொருள் மீண்டும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அரசாணை (நிலை) எண் 237 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை நாள் 26-09-1996-ல் இம்மாநிலத்திலுள்ள அனைத்து மாநகராட்சிகளிலுள்ள (சென்னை மாநகராட்சி நீங்கலாக) பணியாளர்களுக்கான புதிய பணி விதிகள் தோற்றுவிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வரசாணையில் தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகப் பணியாளர்கள் பணியமைப்பு விதிகள், 1996 என்ற தலைப்பில் பணிவிதிகள் அமைக்கப்பட்டு சில நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசாணை (நிலை) எண் 139 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை நாள் 27-05-1997-ல் மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இரண்டு மாநகராட்சிகளின் பிரதான அலுவலக பொறியியல் பிரிவிற்கென ஒரு உதவி செயற் பொறியாளர் (பிரதான அலுவலகம்) என்ற பணியிடத்தை ரூ.8000-275-13500 என்ற ஊதிய விகிதத்தில் தோற்றுவித்து அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியிடம் அம்மாநகராட்சிகளில் உள்ள வாகனங்களை பராமரித்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை கவனித்துக் கொள்வதற்கென தோற்றுவிக்கப்பட்டதாகும். ஆனால் அவ்வரசாணையில் மேற்படி பணியிடத்தை எவ்வாறு நிரப்பப்பட வேண்டுமென எந்தவொரு தெளிவுரையும் வழங்கப்படவில்லை. அரசாணை (நிலை) எண் 77 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந-4) துறை நாள் 13-05-1998-ல் அப்பணியிடம் உறுதி செய்யப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாநகராட்சியினை பொருத்த வரையில் மேற்படி உதவி செயற் பொறியாளர் (பிரதான அலுவலகம்) பணியிடம் தோற்றுவித்த நாள் முதல் இன்று வரை எவரேனும் ஒரு உதவி செயற் பொறியாளரைக் (வார்டு அலுவலகம்) கொண்டு சுழற்சி முறையில் பணியமர்த்தப்பட்டு வருகிறது. தற்சமயம் உதவி செயற்பொறியாளர் (பிரதான அலுவலகம்) பணியிடம் காலியாகவுள்ளது.

1996-ம் வருடத்திய தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் பணி விதிகளின் உட்பிரிவு (4)ன் படி இளநிலைப்பொறியாளர்/உதவிப்பொறியாளர் பணியிடத்திலிருந்து உதவி செயற்பொறியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு அளிப்பதற்கு அடிப்படை தகுதியாக ஒரு இளநிலைப்பொறியாளர்/உதவிப்பொறியாளராக வார்டு அலுவலகத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக பணி புரிந்திருப்பதுடன் மாநகராட்சியின் பிரதான அலுவலகத்தின் பொறியியல் பிரிவில் ஒரு ஆண்டுக்கு மேலாக தொடர்ந்து பணி புரிந்திருக்கவேண்டும். மேலும் 1996-ம் வருடத்திய தமிழ்நாடு மாநகராட்சிகள் பணி விதிகள் பகுதி I, விதி 2(அ)ன் படி வகுப்பு II-ல் சேர்க்கப்பட்டுள்ள பணியிடங்களுக்கு மாநகராட்சியின் மாமன்றம் மூலம் நியமனம் செய்து அதன் பின்னர் அரசின் உறுதியாக்கம் பெறப்பட வேண்டும்.

அரசாணை (நிலை) எண் 140 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 27-05-1997-ல் தெரிவிக்கப்பட்ட தெளிவுரைகளின் அடிப்படையில், பார்வை 5-ல் கண்ட ஆணையரின் குறிப்பாணை ந.க.எண் 177769/2006/எம்.சி1 நாள் 22-12-2006-ல் திரு.கோ.சரவணக்குமாரின் பெயர் இம்மாநகராட்சியின் இளநிலைப் பொறியாளர் (இயந்திரப்பொறியியல்) பணியிடத்திற்கான பணிமூப்புப் பட்டியல் வெளியிடப்பட்டு, பின்னர் பார்வை 6-ல் கண்ட ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்:177769/2006/எம்.சி1 நாள் 14-08-2007-ல் அப்பணிமூப்புப் பட்டியல் இறுதி செய்து வெளியிடப்பட்டுள்ளது. அப்பணிமூப்புப்பட்டியலில் அவரது பெயர் மட்டுமே இடம் பெற்றுள்ளது. திரு.கோ.சரவணக்குமார், இளநிலைப்பொறியாளர் (இயந்திரப்பொறியியல்) இம்மாநகராட்சியின் வாகனங்களின் பராமரிப்பு பொறுப்பில் உள்ளதுடன் வெள்ளலூர் குப்பைங்கிடங்கின் பராமரிப்பு பொறுப்பில் அமர்த்தப்பட்டு, திடக்கழிவு மேலாண்மைத் திட்டப்பணிகளை கவனித்து வருகிறார். மேலும் திடக்கழிவு மேலாண்மைத்தொடர்பான பல பயிற்சி வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் பிரதிநியாகவும் கலந்து கொண்டுள்ளார். 1996-ம் வருடத்திய தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் பணி விதிகளின் உட்பிரிவு (4)ன் படி இளநிலைப் பொறியாளராக வார்டு அலுவலகத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக பணி புரிந்தும் மற்றும் மாநகராட்சியின் பிரதான அலுவலகத்தின் பொறியியல் பிரிவில் ஒரு ஆண்டுக்கு மேலாக தொடர்ந்து பணி புரிந்து வருவதாலும் பார்வை 2-ல் கண்ட அரசாணையில் தோற்றுவிக்கப்பட்ட உதவி செயற்பொறியாளர் (பிரதான அலுவலகம்) பணியிடத்திற்கு பதவி உயர்வு பெறுவதற்கான முழு தகுதியினை பெற்றுள்ளார்.

பார்வை 7-ல் கண்ட திரு.கோ.சரவணக்குமார், இளநிலைப்பொறியாளர் (இயந்திரப்பொறியியல்), நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் கொடுத்த மனுவில் தன்னை உதவி செயற்பொறியாளர் (பிரதான அலுவலகம்) பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்குமாறு கோரியுள்ளார். இதனை பரிசீலித்த நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள், பார்வை 8-ல் கண்ட கடிதம் எண் ந.க.எண்: 4298/2008/F4 நாள் 29-05-2008-ல் கோயம்புத்தூர் மாநகராட்சியிலுள்ள அனைத்து வாகனங்கள் பராமரித்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளை கவனிப்பதற்கென தோற்றுவிக்கப்பட்ட உதவி செயற்பொறியாளர் (பிரதான அலுவலகம்) பணியிடத்தினை இம்மாநகராட்சியின் பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவில் இயந்திரப் பொறியியலில் தேர்ச்சி பெற்று மேற்கூறிய தகுதியினை பெற்றுள்ள திரு.கோ.சரவணக்குமார், இளநிலைப்பொறியாளரை (இயந்திரப்பொறியியல்) பதவி உயர்வு அளித்து நிரப்பிக்கொள்ளுமாறு கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரை கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே கோயம்புத்தூர் மாநகராட்சியிலுள்ள அனைத்து வாகனங்கள் பராமரித்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளை கவனிப்பதற்கென தோற்றுவிக்கப்பட்ட உதவி செயற்பொறியாளர் (பிரதான அலுவலகம்) என்ற பணியிடத்திற்கு இம்மாநகராட்சியின் பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவில் பணிபுரியும் திரு.கோ.சரவணக்குமார், இளநிலைப்பொறியாளருக்கு (இயந்திரப்பொறியியல்) பதவி உயர்வு வழங்கி நியமனம் செய்யவும். அதன் பின்னர் அரசினரின் உறுதியாக்கம் பெறவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் : 177769/2006/எம்.சி 1

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 262 நாள் : 30.10.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 10

கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் : 70 மற்றும் 72 சக்தி சாலையில் தேசிய நெடுஞ்சாலை எண் 209 லட்சுமி நகர் முதல் ஐ.ஓ.பி. சந்திப்பு வரை டெக்ஸ்டுல் கம்பெனி முன்புறம் தேசிய நெடுஞ்சாலைத்துறையின் மூலம் மேம்பாலம் கட்டப்பட்டு வருகிறது. சக்தி சாலையில் இரயில்வே மேம்பாலம் கட்டப்படும் பகுதியில் சாலையின் மேற்கு பகுதியில் உள்ள குறுக்கு சாலைகள் கணபதிப்புதூர் வீதி எண் 1,2,3,4,5 வீதிகளின் பொதுமக்கள் தங்கள் பகுதியில் மேம்பாலம் கட்டப்படுவதால் தங்கள் குடியிருக்கும் சாலையிருந்து சக்தி சாலையை வந்து அடைய முடியாது. மேலும் சாலை எண் 3 வீதி 30 அடி அகலமுள்ளது. இந்த சாலை வழியாகத்தான் எல்லா விதமான வாகனங்களும் செல்ல இயலும். வேறுளந்த வீதி வழியாகவும் செல்ல முடியாது. எனவே, மேம்பாலத்தின் சாய்வு ஐ.ஓ.பி. வங்கி வரை அமைக்கப்படுவதை தவிர்த்து வீதி எண் 3 வரை அமைத்து கொடுக்கப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டு மாண்மிகு இரயில்வே இணை அமைச்சர் அவர்களிடம் மனு அளித்துள்ளனர். மற்றும் சர்வீஸ் சாலையை அகலப்படுத்தி தரவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

17.09.2008ம் தேதி கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத் தலைவர், 70வது வார்டு மாமன்ற உறுப்பினர், மாநகராட்சி நிர்வாகப் பொறியாளர்(கி), மாநகரமைப்பு அலுவலர், வடக்கு மண்டல உதவி ஆணையர், உதவி நிர்வாகப் பொறியாளர் ஆகியோருடன் தேசிய நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த உதவி கோட்டப் பொறியாளர், உதவி பொறியாளர், மாநில நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த உதவி கோட்டப் பொறியாளர், இரயில்வே துறையைச் சார்ந்த துணை முதன்மை பொறியாளர், உதவி பொறியாளர் (கட்டுமானம்), இளம் பொறியாளர், தென்னக ரயில்வே போத்தனூர், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் உதவி நிர்வாகப் பொறியாளர் ஆகியோர் இரயில்வே மேம்பாலம் கட்டுமான பணி நடைபெறும் இடத்திற்கு சென்று ஆய்வு செய்து, இப்பகுதி பொதுமக்களிடம் கலந்து பேசினார்கள். இது குறித்து முடிவு எடுக்க வடக்கு மண்டலத்தில் 17.09.2008ம் தேதி கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் தற்பொழுது தேசிய நெடுஞ்சாலை துறையால் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலத்தின் சாய்வு சக்தி சாலையில் தேசிய நெடுஞ்சாலைத் துறை அளவுகோல்படி 40 மீட்டருக்கு ஒரு மீட்டர் உயரம் என விகிதத்தில் கட்ட வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது. இதனால் கணபதி புதூர் சாலை வீதி எண் 3லிருந்து 130'0" நீளத்திற்கு சாய்வு கட்டப்பட வேண்டும். இதனால் இப்பகுதியில் குடியிருக்கும் 3000 குடும்பங்கள் கணபதி புதூர் பகுதியிலிருந்து வெளியேற முடியாமல் தவிக்கும் சூழ்நிலை ஏற்படும். ஆனால் உத்தேச சாய்வை 30 மீட்டருக்கு ஒரு மீட்டர் உயரம் என்கிற விகிதத்தில் அமைத்தால் பாலத்தின் சாய்வு 100' அடிக்குள் அமையும். கணபதி புதூர் சாலை எண் 3க்குள் அமைந்துவிடும். இதனால் இப்பகுதி 3000 குடும்பங்கள் மேற்கண்ட சிரமத்திலிருந்து விடுபட இயலும் என ஆலோசிக்கப்பட்டது.

தேசிய நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் கலந்தாய்வு கூட்டத்தில் சாய்வு குறித்து 40 மீட்டருக்கு ஒரு மீட்டர் உயரம் என்பதை 30 மீட்டருக்கு ஒரு மீட்டர் உயரம் என மாற்றியமைக்க தேசிய நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம், புதுதில்லி அவர்களால் முடிவுளடுக்க இயலும். எனவே, தாங்கள் மாநகராட்சி மூலம் தீர்மானம் இயற்றி தேசிய நெடுச்சாலைத் துறை அமைச்சகம், புதுதில்லி அவர்களுக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

அதன்படி கணபதி புதூர் சாலை 1,2,3,4,5 வீதிகளில் குடியிருக்கும் 3000 குடும்பங்கள் காக்கும் பொருட்டு மாமன்றம் பரிந்துரை செய்து தீர்மானம் இயற்றி தேசிய நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம், புதுதில்லிக்கு அனுப்பலாம் என கலந்தாய்வு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

எனவே, அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 13057/2008/ டி 1 (வ)

மா.ந.ம.தீர்மானம் எண் : 263 நாள் : 30.10.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 11

பொருள் எண். : கோயமுத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம் - வார்டு எண். 6, வரிவிதிப்பு எண். 15231 - கதவு எண்.18, இராமசாமி நாயுடு இண்டஸ்ட்ரீஸ் எஸ்டேட் வீதி - சொத்துவரி மேல்முறையீடு தீர்ப்பாயத்தில் வரி குறைப்பு செய்யப்பட்டுள்ளது-வரி குறைப்பு செய்தல் தொடர்பாக.

---

கோயமுத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.6, கதவு எண்.18, இராமசாமி நாயுடு இண்டஸ்ட்ரீஸ் எஸ்டேட் வீதி, வரிவிதிப்பு எண்.,15231 சொத்தானது தி/ள். மீனாட்சி இண்டஸ்ட்ரீஸ் என்பவர்கள் பெயரில் உள்ளது. மேற்படி சொத்துக்கு அரையாண்டு சொத்துவரியாக (1.10.89 முதல் 31.3.92 வரை) ரூ.20,676/- எனவும், 1.4.93 முதல் 30.9.98 வரை அரையாண்டுக்கு ரூ.41,431/- எனவும் மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

மேற்படி சொத்துவரியினை எதிர்த்து வரிதாரர் மாநகராட்சி மேல்முறையீடு தீர்ப்பாயத்தில் செய்திருந்த மேல்முறையீட்டு தீர்ப்பாய எண்.டிஏடி.எண்.478/99 மீது வழங்கிய 7.7.2000-ம் தேதிய தீர்ப்பில் அரையாண்டு வரி ரூ.11,492/- ஆக 1.4.89 முதல் 30.9.98 முடிய உள்ள காலத்திற்கு வரி குறைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பின்படி சொத்துவரி நிர்ணயம் செய்து தரும்படி உச்சநீதி மன்ற உத்திரவு எண்.W.P.No.9720/2008 நாள் 22.4.2008-ல், உத்திரவு பெற்று வரிதாரர் சமர்ப்பித்துள்ளார். மேற்படி உச்சநீதிமன்ற உத்திரவினை அமுல்படுத்துவது தொடர்பாக மாநகராட்சி வழக்கறிஞரின் கருத்துரை கோரியதில் மேற்படி வரிவிதிப்பிற்கு மேல்முறையீட்டு தீர்ப்பாய தீர்ப்பினை அமுல்படுத்தும்படியும், இப்பொருள் தொடர்பாக மாநகராட்சி சார்பில் மேல்முறையீடு செய்ய இயலாது எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே மேல்முறையீட்டு தீர்ப்பாய தீர்ப்பின்படி, வரிதாரருக்கு கீழ்கண்டவாறு சொத்துவரி குறைக்கப்பட வேண்டியுள்ளது.

**W.e.f.** 1.10.89 முதல் 31.3.92 வரை

| | MRV | AV | G.T. | W&D | E.T. | L.C. | TOTAL |
|---|---|---|---|---|---|---|---|
| (0) | 11,463 | 1,27,239 | 7,650 | 8,270 | 3,101 | 1,655 | 20,676 |
| (R) | 6,371 | 70,718 | 4,252 | 4,597 | 1,724 | 919 | 11,492 |
| (D) | 5,092 | 56,521 | 3,398 | 3,673 | 1,377 | 756 | 9,180 |

**W.e.f.** 1.4.93 முதல் 30.9.98 வரை

| | AV | G.T. | W&D | E.T. | L.C. | TOTAL |
|---|---|---|---|---|---|---|
| (0) | 255080 | 15329 | 16572 | 6215 | 3315 | 41431 |
| (R) | 70718 | 4252 | 4597 | 1724 | 919 | 11492 |
| (D) | 184362 | 11077 | 11975 | 4491 | 2396 | 29939 |

**W.e.f.** 1.10.98 முதல்

| (0) | AV | G.T. | W&D | E.T. | L.C. | TOTAL |
|---|---|---|---|---|---|---|
| | 330302 | 19928 | 21544 | 8079 | 4309 | 53860 |
| (R) | 91,933 | 5,527 | 5,976 | 2,241 | 1,195 | 14,939 |
| (D) | 238369 | 14401 | 15568 | 5838 | 3114 | 38921 |

எனவே மேல் முறையீட்டு தீர்ப்பாய தீர்ப்பின்படி, வ.வி.எண்.15231-க்கு மாத வாடகை மதிப்பு ரூ.11,463/-லிருந்து ரூ.6,371/- ஆகவும், அதன் வரித்தொகை ரூ.20,676/-லிருந்து 1.10.89 முதல் 30.9.98 வரை ரூ.11,492/- ஆகவும், 1.10.98 முதல் பொது வரி சீராய்வின்படி 30% ஆக உயர்வு செய்து வரித்தொகை ரூ.14,939/-எனவும் நிர்ணயம் செய்து மேல் முறையீட்டு தீர்ப்பாய தீர்ப்பின்படி மேற்கண்டவாறு வரி குறைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.54 நாள் 25.8.2008-ன் மூலம் அனுமதி வழங்கியுள்ளதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 9720/ 2008/ கிஅ.1

**மா.ந.ம.தீர்மானம் எண் : 264 நாள் : 30.10.2008**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 54 நாள் 25.8.2008 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 12

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப் புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 983/08/ எம்.டி 2 | வடக்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி பள்ளிகளுக்கு குடிநீர் சுத்திகரிப்பு செய்யும் இயந்திரம் வழங்கி பொருத்துதல் | 11.00 | 22.08.08 மூன்றாம் அழைப்பு | திருமதி கே. பங்கஜம் | 4.55 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: வ.எண்.1–ல் உள்ள பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப் புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும், அனுமதிக்கலாம். ந.க.எண்.983/08/எம்.டி 2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 265 நாள் : 30.10.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 13

மனுதாரர் திரு. ராஜேந்திரா ஆர். மேத்தா, கோயம்புத்தூர் அவர்கள் கோயம்புத்தூர் மாநகராட்சி, சிங்காநல்லூர் கிராமம், க.ச. எண். 413 / 2 –ல் ஸ்டில்ட் தளத்தில் வாகன நிறுத்திமிடமாகவும், தரை மற்றும் பத்து தளங்களில் A பிளாக் + B பிளாக் (40+40)=80 எண்ணிக்கையுள்ள குடியிருப்புகள் கட்ட உத்தேசித்து வரைபடங்கள் உள்ளூர் திட்ட குழுமத்திற்கு மாநகராட்சி மூலமாக 6.2.2008 –ல் விண்ணப்பித்துள்ளார்.

மேற்படி மனையிடம் மாநகராட்சி தேர்தல் வார்டு எண். 7 –ல் திருச்சி சாலையில் அமைந்துள்ளது. மனையிடத்தின் பரப்பு 3905.16 ச.மீ ஆகும். மனுதாரர் கட்ட உத்தேசித்துள்ள கட்டிடத்தின் உயரம் 18.48 மீ. மனையிடத்தின் முன்புறம் 100'0" அகலமுள்ள திருச்சி சாலை அணுகு சாலையாக அமைந்துள்ளது. மனையிடம் சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 37 –லும், முழுமைத்திட்டத்தின்படி குடியிருப்பு பகுதியிலும் அமைந்துள்ளது. மனுதாரரின் உத்தேச கட்டிடத்தின் உயரம் 15 மீட்டருக்கு அதிகமாக 18.48 மீ உள்ளது.

எனவே, மேற்படி மனையிடத்தினை பல அடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்ய மனுதாரரின் கோரிக்கையினை நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு. ஒப்புதல் செய்யலாம். ந.க. எண். 16746 / 2007 / எச்1 (கி)

**மா.ந.ம.தீர்மானம் எண் : 266 நாள் : 30.10.2008**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 14

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க 22.08.08 மற்றும் 10.10.08 அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 20794/08/ எம்.டி.4 | வார்டு எண் 37 சிட்டி மேல்நிலைபள்ளியில் சுற்றுசுவர் கட்டுதல் | 15.00 | 07.08.08 முதல் அழைப்பு | திரு.என். குருவாயூரப்பன் | 4.95 அதிகம் |
| 2 | 2147/08/ எம்.டி.2 | வார்டு எண்17 வி.ஜி .ராவ் நகரில் உள்ள பள்ளிக்கு சுற்றுசுவர் கட்டுதல் | 12.50 | 13.08.08 முதல் அழைப்பு | தி /ள்.கே.சி.பி. இன்ஜினியர்ஸ் | 4.40 அதிகம் |
| 3 | 11524/08/ எம்.டி.4 | வார்டு எண் 12 கொங்கு நகரில் சங்கனுார் பள்ளம் முதல் கிழபுறமாக உள்ள சாக்கடைக்கு மூடு பலகை அமைத்தல் | 2.30 | 31.07.08 மூன்றாம் அழைப்பு | தி/ள் எம்.எஸ்.. இன்ஜினியர்ஸ் | 4.58 அதிகம் |
| 4 | 6420/08/ எம்.டி.4 | வார்டு எண் 7 திருமால் வீதி மருந்தகத்தில் மேல் தளத்தில் மகப்பேறு மருத்துவமனை கட்டுதல். | 25.00 | 07.08.08 முதல் அழைப்பு | திரு.என். குருவாயூரப்பன் | 4.97 அதிகம் |
| 5 | 6537/08/ எம்.டி.4 | வார்டு எண் 27 காளீஸ்வரா நகரில் சலவைத்துறை கட்டிடம் கட்டுதல் | 8.00 | 07.08.08 முதல் அழைப்பு | தி /ள்.கே.சி.பி. இன்ஜினியர்ஸ் | 4.92 அதிகம் |
| 6 | 17365/07/ எம்.டி.4 | வார்டு எண் 43 கெம்பட்டி காலனி மேல்நிலை பள்ளியில் சுற்றுசுவர் மற்றும் தளம் அமைத்தல் | 12.80 | 07.08.08 முதல் அழைப்பு | தி/ள்.என்.பி.கே. அசோசியேட்ஸ் | 4.56 அதிகம் |
| 7 | 20793/07/ எம்.டி.4 | வார்டு எண் 37 சிட்டி மாநகராட்சி மேல்நிலை பள்ளியில் கூடுதல் வகுப்பு அறைகள் கட்டுதல் | 15.00 | 14.08.08 முதல் அழைப்பு | திரு.என். குருவாயூரப்பன் | 4.95 அதிகம் |
| 8 | 16464/07/ எம்.டி.4 | வார்டு எண் 42 நொய்யல் ஆற்றுப்படுகையில் உள்ள இந்துக்கள் மயானத்தில் அபிவிருத்திபணிகள் செய்தல் | 5.55 | 07.08.08 முதல் அழைப்பு | தி /ள்.பாக்கியா பில்டர் | 0.10 அதிகம் |
| 9 | 1565/07/ எம்.டி.4 | வார்டு எண் 61-ல் வெங்கட்டாபுரம் கமலநாத நினைவு மேல்நிலை பள்ளியில் வட பகுதியில் இரண்டாம் தளத்தில் கூடுதல் வகுப்பு அறைகள் கட்டுதல் மற்றும் அபிவிருத்திபணிகள் செய்தல் | 16.00 | 29.08.08 ஏழாம் அழைப்பு | தி/ள்.என்.பி.கே. அசோசியேட்ஸ் | 4.79 அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | 1563/07/ எம்.டி.4 | வார்டு எண் 61-ல் வெங்கட்டாபுரம் கமலநாத நினைவு மேல்நிலை பள்ளியில் தென் பகுதியில் இரண்டாம் தளத்தில் கூடுதல் வகுப்பு அறைகள் கட்டுதல் மற்றும் அபிவிருத்திபணிகள் செய்தல் | 13.25 | 29.08.08 ஏழாம் அழைப்பு | தி/ள்.என்.பி.கே. அசோசியேட்ஸ் | 4.95 அதிகம் |
| 11 | 15342/07/ எம்.டி.2 | வார்டு எண் 14-ல் உள்ள உடையாம்பாளையம் மாநகராட்சி மேல்நிலை பள்ளியில் தளத்தில் கூடுதல் வகுப்பு அறைகள் கட்டுதல் மற்றும் அபிவிருத்திபணிகள் செய்தல் | 25.00 | 24.09.08 இரண்டாம் அழைப்பு | திரு.ஏ. விஜயகுமார் | 3.21 அதிகம் |
| 12 | 5161/08/ எம்.டி.2 | வார்டு எண் 17-ல் கிருஷ்ணாபுரம் மயனாத்திற்கு அபிவிருத்திபணிகள் செய்தல் | 10.05 | 24.09.08 இரண்டாம் அழைப்பு | தி /ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ் | 4.75 அதிகம் |
| 13 | 11671/07/ எம்.டி.2 | வார்டு எண் 69-ல் முத்துக்குமார் நகரில் வரி வசூல் மையம் கட்டுதல் | 9.25 | 24.09.08 ஏழாம் அழைப்பு | திருமதி. சி.பாப்பாத்தி | 4.84 அதிகம் |
| 14 | 11670/07/ எம்.டி.2 | வார்டு எண் 68-ல் சம்பத் வீதியில் வரி வசூல் மையம் கட்டுதல் | 9.25 | 24.09.08 ஏழாம் அழைப்பு | திரு. ஆர்.செல்வராஜ் | 4.84 அதிகம் |
| 15 | 11619/07/ எம்.டி.2 | அவினாசி சாலை மற்றும் திருச்சி சாலையில் குடிநீர் குழாய் அமைத்தல் | 25.00 | 24.09.08 நான்காம் அழைப்பு | திரு. ஆர்.உமாபதி | 4.02 அதிகம் |
| 16 | 11063/08/ எம்.டி.4 | கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட மேட்டுப்பாளையம் சாலையில் மாநகராட்சி இடத்தில் உயர் நிலைப்பள்ளி கட்டுதல்.(தென் வடல் பிளாக்) | 25.00 | 30.09.08 முதல் அழைப்பு | திரு.யூ .மணி | 4.84 அதிகம் |
| 17 | 11064/08/ எம்.டி.4 | கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட மேட்டுப்பாளையம் சாலையில் மாநகராட்சி இடத்தில் உயர் நிலைப்பள்ளி கட்டுதல். (கிழ மேல் பிளாக்) | 25.00 | 30.09.08 முதல் அழைப்பு | திரு.யூ.மணி | 4.84 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - வரிசை எண்.1 முதல் 17 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பேற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் **20794/08/**எம்.டி.4

**மா.ந.ம.தீர்மானம் எண் : 267 நாள் : 30.10.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 15

பொருள் - பணியமைப்பு - கோவை மாநகராட்சியில் தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் மற்றும் காந்திபுரம் பேருந்து நிலையம் ஆகியவற்றில் டெக்ஸ்கோ நிறுவனம் மூலம் காவலாளிகளை நிா்ணயிக்கப்பட்டது குறித்து.

------------

இம்மாநகராட்சியில் தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் மற்றும் காந்திபுரம் பேருந்து நிலையங்களில் டெக்ஸ்கோ நிறுவனம் மூலம் 7 காவலாளிகளை மாதம் ஒன்றுக்கு ரூ. 37,421/- வீதம் 21.4.2006 முதல் 20.03.2007 வரை உள்ள காலத்திற்கு வழங்கவும், 21.03.2007-க்குப் பிறகு உள்ள காலத்திற்கு 7 காவலாளிகளை பணியமா்த்திக் கொள்ளவும் மாமன்ற தீா்மான எண். 24 நாள் 31.05.2007-ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி காவலாளிகளில் 3 பேர் உக்கடம் பேருந்து நிலையத்திலும் 4 பேர் காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்திலும் பணிபுரிந்து வருகின்றாா்கள். இவா்களுக்கு 21.3.2007 முதல் 20.11.2007 முடிய மாதம் ஒன்றுக்கு ரூ. 37,421/- வீதம் ஏற்கனவே தொகை வழங்கப்பட்டமைக்கு மன்றத்தின் அனுமதியும் தொடா்ந்து 21.11.2008 முதல் 31.03.2009 வரை உள்ள காலங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 37,421/- வீதம் டெக்ஸ்கோ நிறுவனத்தின் மூலம் பணி அமா்த்தப்பட்ட ஏழு காவலாளிகளுக்கு தொகை வழங்க அனுமதியும் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 8957/08/சி 1 (தெ)

**மா.ந.ம.தீர்மானம் எண் : 268 நாள் : 30.10.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 16

பொருள் : கடைகள் – கோயமுத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட முத்து விநாயகா் கோவில் வீதி வணிக வளாகம் - கடை எண்.13 முதல் 18 வரை – ஒதுக்கீடு – தொடா்பாக.

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட முத்து விநாயகா் கோவில்வீதி வணிக வளாகக் கடை எண்.13 முதல் 18 வரை (6கடைகளுக்கு) 26-08.08 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ் காணும் நபா்கள் கலந்து கொண்டனா்.

1. திரு.R.பிரவீன் குமாா்
2. திரு. P.முரளி

மேற்படி ஏலத்தில் பொதுஏலம் யாரும் கூறவில்லை. எனவே ஒப்பந்தப்புள்ளி பெட்டி திறக்கப்பட்டது. இதில் திரு.R.பிரவின் குமாா் என்பவா் ரூ.1200/-ம் திரு. P.முரளி என்பவா் ரூ.1,100/-ம் மாத வாடகையாக கோரியிருந்தனா்.

மேற்படி வணிக வளகத்தில் 13 முதல் 18 உள்ள கடைகளுக்கு பலமுறை ஏலம் விடப்பட்டும் ஒருவரும் ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை. இக்கடைகள் கட்டி முடிக்கப்பட்ட நாள்முதல் காலியாகவே உள்ளன.

எனவே தற்பொழுது உயர்ந்தபட்சமாக மாத வாடகையாக ரூ.1200/- தலா ஒரு கடை வீதம் 6 கடைகளுக்கு கோரியிருந்த திரு.R.பிரவீன் குமார் என்பவருக்கு கடைகளை ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவரின் அனுமதி பெற்று மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.1001/07/அ10

மா.ந.ம.தீர்மானம் எண் : 269 நாள் : 30.10.2008

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 17

கோயம்புத்தூர் மாநகராட்சி-கிழக்கு மண்டலம்- வார்டு எண்-7, சிங்காநல்லூர் பகுதி கடை வீதி தெருவில் சுகாதார பணியாளர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகள் பிளாக் 'A' மற்றும் 'B' கட்ட ரூ.1,00,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

2007-2008-ம் ஆண்டு மாநகராட்சியின் கொள்கை விளக்கத்தில் மாநகராட்சியின் சுகாதார பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித் தருவதென குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே அப்பகுதியில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த குடியிருப்புகளுக்கு பதிலாக அதே இடத்தில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் கூடிய இரண்டு பிளாக்குகள் கொண்ட 16 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,00,00,000/-க்கு மாமன்றத்தின் ஒப்புதலுடன் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை, அவர்களுக்கு 23.6.2008 அன்று அனுப்பப்பட்டது.

தற்போது வெளியிடப்பட்டுள்ள அரசாணையில் (அரசாணை எண்-258/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்- 26-08-08) ரூ.50.00 இலட்சம் முதல் ரூ.1.00 கோடி மதிப்பீட்டிலான பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்க கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றத்திற்கு அதிகாரம் அளித்துள்ளது. எனவே மேற்படி சுகாதார பணியாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,00,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் :598 / 2008/ எம்.டி2

மா.ந.ம.தீர்மானம் எண் : 270 நாள் : 30.10.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 18

கோயம்புத்தூர் மாநகராட்சி-கிழக்கு மண்டலம்- வார்டு எண்-7, சிங்காநல்லூர் பகுதி கடை வீதி தெருவில் சுகாதார பணியாளர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகள் பிளாக் 'C' மற்றும் 'D' கட்ட ரூ.1,00,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

2007-2008-ம் ஆண்டு மாநகராட்சியின் கொள்கை விளக்கத்தில் மாநகராட்சியின் சுகாதார பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித் தருவதென குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே அப்பகுதியில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த குடியிருப்புகளுக்கு பதிலாக அதே இடத்தில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் கூடிய இரண்டு பிளாக்குகள் கொண்ட 16 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,00,00,000/-க்கு மாமன்றத்தின் ஒப்புதலுடன் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை, அவர்களுக்கு 23.6.2008 அன்று அனுப்பப்பட்டது.

தற்போது வெளியிடப்பட்டுள்ள அரசாணையில் (அரசாணை எண்-258/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்- 26-08-08) ரூ.50.00 இலட்சம் முதல் ரூ.1.00 கோடி மதிப்பீட்டிலான பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்க கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றத்திற்கு அதிகாரம் அளித்துள்ளது. எனவே மேற்படி சுகாதார பணியாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,00,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் :597 / 2008/ எம்.டி2

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 271 நாள் : 30.10.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 19

கோயம்புத்தூர் மாநகராட்சி- வடக்கு மண்டலம்- வார்டு எண்-2, பிரிவு எண்-I, பயனீர் மில் சாலையில் சுகாதார பணியாளர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகள் பிளாக் 'A' மற்றும் 'B' கட்ட ரூ.1,00,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

2007-2008-ம் ஆண்டு மாநகராட்சியின் கொள்கை விளக்கத்தில் மாநகராட்சியின் சுகாதார பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித் தருவதென குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே அப்பகுதியில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த குடியிருப்புகளுக்கு பதிலாக அதே இடத்தில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் கூடிய இரண்டு பிளாக்குகள் கொண்ட 16 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,00,00,000/-க்கு மாமன்றத்தின் ஒப்புதலுடன் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை , அவர்களுக்கு 23.06.2008 அன்று அனுப்பப்பட்டது.

தமிழக அரசு 1981-ம் வருட கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்திற்கு 26.08.08-ம் தேதி அவசர சட்டம் எண். 6-ல் சட்டதிருத்தம் செய்து, தமிழ்நாடு அரசிதழில் எண். 258 நாள் 26.08.08 அன்று வெளியிடப்பட்டுள்ளபடி, ரூ.50.00 இலட்சம் முதல் ரூ.1.00 கோடி மதிப்பீட்டிலான பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்க கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றத்திற்கு அதிகாரம் அளித்துள்ளது. எனவே மேற்படி சுகாதார பணியாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,00,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் :16055 / 2008/ எம்.டி2

**<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 272 நாள் : 30.10.2008</u>**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 20

**கோயம்புத்தூர் மாநகராட்சி- வடக்கு மண்டலம்- வார்டு எண்-2, பிரிவு எண்-I, பயனீர் மில் சாலையில் சுகாதார பணியாளர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகள் பிளாக் 'C' மற்றும் 'D' கட்ட ரூ.1,00,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.**

**2007-2008-ம் ஆண்டு மாநகராட்சியின் கொள்கை விளக்கத்தில் மாநகராட்சியின் சுகாதார பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித் தருவதென குறிப்பிடப்பட்டுள்ளது.**

**எனவே அப்பகுதியில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த குடியிருப்புகளுக்கு பதிலாக அதே இடத்தில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் கூடிய இரண்டு பிளாக்குகள் கொண்ட 16 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,00,00,000/-க்கு மாமன்றத்தின் ஒப்புதலுடன் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை , அவர்களுக்கு 23.06.08 அன்று அனுப்பப்பட்டது.**

**தமிழக அரசு 1981-ம் வருட கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்திற்கு 26.08.08-ம் தேதி அவசர சட்டம் எண். 6-ல் சட்டதிருத்தம் செய்து, தமிழ்நாடு அரசிதழில் எண். 258 நாள் 26.08.08 அன்று வெளியிடப்பட்டுள்ளபடி, ரூ.50.00 இலட்சம் முதல் ரூ.1.00 கோடி மதிப்பீட்டிலான பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்க கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றத்திற்கு அதிகாரம் அளித்துள்ளது. எனவே மேற்படி சுகாதார பணியாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,00,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம்** **ந.க.எண் :16056 / 2008/ எம்.டி2**

**<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 273 நாள் : 30.10.2008</u>**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 21

**கோயம்புத்தூர் மாநகராட்சி- வடக்கு மண்டலம்- வார்டு எண்-2, பிரிவு எண்-I, பயனீர் மில் சாலையில் சுகாதார பணியாளர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகள் பிளாக் 'E' மற்றும் 'F' கட்ட ரூ.1,00,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.**

**2007-2008-ம் ஆண்டு மாநகராட்சியின் கொள்கை விளக்கத்தில் மாநகராட்சியின் சுகாதார பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித் தருவதென குறிப்பிடப்பட்டுள்ளது.**

**எனவே அப்பகுதியில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த குடியிருப்புகளுக்கு பதிலாக அதே இடத்தில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் கூடிய இரண்டு பிளாக்குகள் கொண்ட 16 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,00,00,000/-க்கு மாமன்றத்தின் ஒப்புதலுடன் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை , அவர்களுக்கு 23.06.08 அன்று அனுப்பப்பட்டது.**

தமிழக அரசு 1981-ம் வருட கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்திற்கு 26.08.08-ம் தேதி அவசர சட்டம் எண். 6-ல் சட்டதிருத்தம் செய்து, தமிழ்நாடு அரசிதழில் எண். 258 நாள் 26.08.08 அன்று வெளியிடப்பட்டுள்ளபடி, ரூ.50.00 இலட்சம் முதல் ரூ.1.00 கோடி மதிப்பீட்டிலான பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்க கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றத்திற்கு அதிகாரம் அளித்துள்ளது. எனவே மேற்படி சுகாதார பணியாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,00,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் :16159 / 2008/ எம்.டி2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 274 நாள் : 30.10.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 22

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் கழிவு நீர் பண்ணையில் கிழப்புறத்தில் 10 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் மூலம் நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமையவுள்ள நிலப்பரப்பில் உள்ள 400 தைல மரங்களை வெட்டி அப்புறப்படுத்த 25.09.2008 தேதியில் இரண்டாவது அழைப்பாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களில் அரசாங்க நிர்ணய விலையை விட கூடுதலாகவும் உட்சபட்ச ஏலத் தொகையாக பொது ஏலத்தில் ரூ. 45,500/- க்கு திருவாளர்கள். சன் டிரேடர்ஸ் அவர்கள் கோரியுள்ளார். மேலும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை.

மேற்படி பகுதியில் நவீன சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியை விரைவுபடுத்தி செயல்படுத்த ஏலதாரர் திருவாளர்கள். சன் டிரேடர்ஸ் அவர்களின் உட்சபட்ச ஏலத்தொகையான ரூ. 45,500/- யை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அரசாங்க மதிப்பிற்கும் அதிகமாகவும், இரண்டாம் முறையாக பொது ஏலத்தில் உச்ச ஏலத்தொகையாக ரூ. 45,500/- கோரியுள்ள திருவாளர்கள் சன் டிரேடர்ஸ் அவர்களின் உச்ச தொகையினை மாமன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

ந.க.எண். 10214/2008/JN2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 275 நாள் : 30.10.2008**

தி/ள் சன் டிரேடர்ஸ் அவர்களின் உச்ச ஏலத்தொகையினை ஏற்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 23

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண். 36 சிரியன் சர்ச் சாலை 2 கதவு எண். 1, 2 நகரளவு எண். 8 / 1397 –ல் உள்ள 8680 சதுரடி மனையிடம் அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்பு திட்டம் எண். 4 -ன்படி குடியிருப்பு பகுதியில் உள்ளது. அதனை வணிக உபயோக மாற்றம் செய்யக் கோரி மனுதாரர் திருமதி. கே. ருக்மணி கார்த்திகேயன் விண்ணப்பம் செய்துள்ளார்.

மேற்படி மனைக்கு 40 அடி அகல மாநகராட்சி சாலை அணுகு சாலையாக உள்ளது. நில உபயோக மாற்றம் பெற்ற பின்னர் கட்டிட அனுமதி கோரி கட்டிட அனுமதி மனு மனுதாரர் சமர்ப்பிக்க வேண்டும்.

எனவே மேற்படி 8680 சதுரடி மனையிடத்தை குடியிருப்பு உபயோகத்திலிருந்து வணிக உபயோகத்திற்கு நில உபயோக மாற்றம் செய்ய நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண். 67 நாள். 17.10.2008ல் “ குடியிருப்பு நில உபயோக பகுதியிலிருந்து வணிக நில உபயோக பகுதியாக மாற்றம் செய்ய கோரும் இப்பொருள் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது” என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மாமன்றத்தின் ஒப்புதலுக்கு ந.க.எண். 5943 / 08 / எச்1(தெ)

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 276 நாள் : 30.10.2008</u>

நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் 17.10.08 ம் தேதிய தீர்மானம் எண். 67 ஐ ஏற்று பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள 8680 சதுரடி மனையிடத்தினை குடியிருப்பு நில உபயோகத்திலிருந்து வணிக நில உபயோக பகுதியாக மாற்றம் செய்ய ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 24

மனுதாரர் திரு. பி. விஜயகுமார், தி / வா. ஜெயின் ஹவுசிங் & கன்ஸ்ட்ரக்ஷன் லிமிடெட், கோயம்புத்தூர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி, இராமநாதபுரம் கிராமம், நகரளவு எண்கள். 1781 /4A10B7, 1781 / 4B1B, 1782 / 1A2 மற்றும் 1782 / 1B1 –ல் உள்ள 1 ஏக்கர் 18 சென்ட் 212 சதுரடி நிலத்தினை குடியிருப்பு நில உபயோக பயன்பாட்டிலிருந்து வணிக நில உபயோக பயன்பாட்டிற்கு நில உபயோக மாற்றம் செய்யவும், இப்பகுதியினை பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யவும் கோரி 19.2.2008 –ல் விண்ணப்பித்துள்ளார்.

மேற்படி மனையிடம் மாநகராட்சி தேர்தல் வார்டு எண். 22 –ல் பங்கஜா மில் சாலையில் 4775.25 ச.மீ பரப்பில் அமைந்துள்ளது. மனையிடம் கோயம்புத்தூர் அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்புத் திட்டம் எண்.2 –லும், குடியிருப்பு பகுதியிலும் அமைந்துள்ளது. பங்கஜா மில் சாலை 80’-0” சாலை அணுகுசாலையாக அமைந்துள்ளது.

மனுதாரர் மனையிடத்தில் தரைதளத்தில் வாகனம் நிறுத்துமிடமாகவும், முதல் தளத்தில் ஹோட்டலும், இரண்டாம் தளத்தில் கூட்ட அரங்கமும், முன்றாம் தளம் முதல் ஒன்பதாம் தளம் வரை 217 எண்ணிக்கையயுள்ள அறைகள் கொண்ட ஹோட்டல் கட்டிடம் 15 மீட்டருக்கு மேல் 27.85 மீட்டர் உயரம் வரை கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி 4775.25 ச.மீ பரப்புள்ள மனையிடத்தினை குடியிருப்பு நில உபயோக பகுதியிலிருந்து வணிக நில உபயோக பகுதியாக நில உபயோக மாற்றம் செய்யவும், இப்பகுதியினை பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யவும் கோரும் மனுதாரரின் கோரிக்கையினை நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களுக்கு மாமன்ற ஒப்புதல் பெற்று அனுப்ப நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண். 66 நாள். 17.10.2008 -ல் “ குடியிருப்பு நில உபயோக பகுதியிலிருந்து வணிக நில உபயோக பகுதியாக மாற்றம் செய்ய கோரும் இப்பொருள் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது” என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -மாமன்றத்தின் ஒப்புதலுக்கு ந.க.எண். 3704 / 2008 / எச்2(கி)

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 277 நாள் : 30.10.2008</u>

கட்டிட அனுமதி வழங்குவதற்கு முன்பு, பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள மனையிடத்திற்கு காலியிட வரி நிர்ணயம் செய்து வசூலிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் 17.10.08 ம் தேதிய தீர்மானம் எண் 66 ஐ ஏற்று பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள 4775.25 ச.மீ. பரப்புள்ள மனையிடத்தினை (1 ஏக்கர் 18 சென்ட் 212 சதுரடி) குடியிருப்பு நில உபயோகத்திலிருந்து வணிக நில உபயோக பகுதியாக நில உபயோக மாற்றம் செய்யவும், மற்றும் பலஅடுக்குமாடி உயர்கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---